# கால்நடை மருத்துவ விழிப்புணர்வு முகாம்: அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார்

**திருச்செந்தூர் செப் 24**

கால்நடை மருத்துவ விழிப்புணர்வு முகாமில் சிறந்த கால்நடை வளர்ப்போருக்கு அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் பரிசுகள் வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம் அங்கமங்கலம் ஊராட்சியில் நடத்தப்பட்ட மாபெரும் சிறப்பு கால்நடை மருத்துவ விழிப்புணர்வு முகாமில் சிறந்த கால்நடை வளர்ப்போருக்கு மீன்வளம்-மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பரிசுகள் வழங்கினார்.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் கி.செந்தில்ராஜ், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஊராட்சித் தலைவர் அ.பிரம்மசக்தி, ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ச.ஜனகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கருணாநிதி நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் அங்கமங்கலம் ஊராட்சியில் நடத்தப்பட்ட சிறப்பு கால்நடை மருத்துவ விழிப்புணர்வு முகாமில் பயனாளிகளுக்கு தாது உப்பு கலவைகளை அமைச்சர் .அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வழங்கினார். கலெக்டர் மரு.கி.செந்தில்ராஜ் எம்.சி.சண்முகையா எம்எல்ஏ,மாவட்ட ஊராட்சித்தலைவர் அ.பிரம்மசக்திஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்ச. ஜனகர் ஆகியோர் உடன் உள்ளனர்.

<u>தென்காசி மாவட்டத்தில்</u>

# கூட்டுறவுத் துறை நியாய விலைக்கடைகளில் யுபிஐ, ரொக்கமில்லா மின்னணு பணப்பரிவர்த்தனை

## கலெக்டர் துரை.ரவிச்சந்திரன் துவக்கி வைத்தார்



**தென்காசி செப்.23:**

தென்காசி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை நியாய விலைக் கடைகளில் யுபிஐ ரொக்கமில்லா மின்னணு பணப்பரிவர்த்தனையை ஆர் சர்ச் தெரு நியாய விலைக் கடையில் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை.இரவிச்சந்திரன் துவக்கி வைத்தார்.

இந் நி கழ்ச் சி யில் துணைப்பதிவாளர் பொது விநியோகத் திட்டம் திவ்யா முன்னிலை வகித்தார், கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் .நரசிம்மன் தலைமை வகித்தார்;. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பேசியதாவது,

தென்காசி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் 505 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 321 முழுநேர நியாய விலைக் கடைகளும். 184 பகுதிநேர நியாய விலைக் கடைளும் செயல்பட்டுவருகின்றன.மின்னணு பரிவர்த்தனையின் அளவு இந்தியாவில் உயர்ந்துகொண்டே செல்வதால் ரொக்கமில்லா பரிவர்த்தனை தவிர்க்க முடியாத வளர்ச்சியாக மாறி வருகிறது. யுபிஐ சாமானிய மக்கள் எளிமையாக பயன்படுத்தும் வகையிலும், நேரடியாக வங்கியிலிருந்து பணம் எடுக்கப்படுவதால் மக்கள் வங்கிக்கும், பணம் எடுக்கும் இயந்திரத்தை நோக்கி செல்லும் நேரம் குறைகிறது.

தமிழக அரசு நியாய விலைக் கடைகளிலும். ரொக்கமற்ற பணப்பரிவர்த்தனையை செயல்படுத்திட அறி வு றுத் தி ய தைத் தொடர்ந்து தென்காசி மாவட்டத்தில் இன்று முதல்கட்டமாக 105 நியாய விலைக் கடைகளில் ரொக்கமில்லா பணப்பரிவர்த்தனை தொடங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்;ந்து மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுத் துறையின் கீழ் 505 நியாய விலைக் கடைகளிலும் இந்நடைமுறை செயல்படுத்தப்படும். இதனால் மக்கள் தங்கள் செலுத்த வேண்டிய தொகையை எளிதாகவும், சரியாகவும் செலுத்தலாம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு சார்பதிவாளர் ராஜ் வரவேற்புரை ஆற்றினார் இறுதியாக கூட்டுறவுச் சங்க மேலாளர் அழகுசுந்தரம் நன்றியுரை ஆற்றினார்,விழா ஏற்பாடுகளை தென்காசி மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாளர் .கோமதிசந்திரன் செய்தார்,விழா நிகழ்வுகளை மாவட்ட உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ராமசுப்பிரமணியன் ஒருங்கிணைத்தார்.

# சங்கரன்கோவிலுக்கு வருகை தரும் அமைச்சர் அனிதா கிருஷ்ணனுக்கு உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும்

## வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ அறிக்கை



**சங்கரன்கோவில்.செப்.23:**

தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ விடுத்துள்ள அறிக்கையில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தென்காசி மாவட்டத்தில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை புரிகிறார்.

தென்காசி வடக்கு மாவட்டம் மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியம் சின்னகோவிலான்குளம் கிராமத்தில் வெள்ளாட்டின ஆராய்ச்சி மையத்தை துவக்கி வைக்க வர உள்ளார். வெள்ளாட்டின ஆராய்ச்சி மையத்தை துவக்கி வைக்க வருகை தரும் அமைச்சருக்கு தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சேர்ந்தமரம் பகுதியில் காலை 10.00 மணிக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்படுகின்றது. இதில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர், கிளை கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் கழகத்தினர் அனைவரும் பங்கேற்று அமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

<u>திமுக பொறியாளர் அணி சார்பில்</u>

# பொறியியல் மாணவர்களுக்கான மாநில அளவிலான பேச்சுப்போட்டி வரும் 26ம் தேதி நடக்கிறது

**தென்காசி செப்.23-**

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திமுகதின் பொறியாளர் அணி சார்பில் பொறியியல் மாணவர்களுக்கான மாநிலம் தழுவிய மாபெரும் பேச்சுப்போட்டி நடத்தப்படுகிறது

இதன் அடிப்படையில் தென்காசி தெற்கு மாவட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் வே.ஜெயபாலன் ஆலோசனை யின் பேரில் தென்காசி தெற்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகள் ஆன தென்காசி கடையநல்லூர் ஆலங்குளம் ஆகிய மூன்று தொகுதிகளிலும் நடைபெறுகிறது இதில் பொறியியல் பிரிவை சார்ந்த மாணவ மாணவியர்கள் பங்கு பெறலாம்

இதில் தலைப்புகள் , தொழில்நுட்பக்கல்விக்குத் தோள்கொடுத்த கலைஞர், தொழில்முனைவையுயர்த்திய தமிழினத்தலைவர், திராவிட மாடலும் திறன்மிக்கக் கல்வியும், தெற்குசூரியன் கலைஞர் தமிழும் என தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன அதாவது (பொறியியல் டிப்ளமோ ஐடிஐ) வருகிற (26/9/2023 ) செவ்வாய் கிழமை அன்று தென்காசி மன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆலங்குளம் மரியம் பாலிடெக்னிக்கில் வைத்து பேச்சுப்போட்டி நடைபெறுகிறது கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கான பேச்சுப் போட்டியானது (27/09/23) புதன்கிழமை காலை10 மணியளவில்அசுகரட்டு ஆய்க்குடி சாலையில் உள்ள ஜே.பி பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெறுகிறது தென்காசி சட்டமன்றத் தொகுதிக்கான பேச்சுப் போட்டியானது (27/09/23) மதியம் 2மணிக்குதென்காசி அருள்மிகு செந்தில் ஆண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் வைத்து நடைபெறுகிறது எனவே பொறியியல் பிரிவை சார்ந்த மாணவ மாணவியர்கள் பங்கு பெற்று பேச்சு போட்டியில் கலந்து கொண்டு பரிசுகளை பெற்று தொகுதி வாரியாக வெற்றி பெற்ற மாணவர்கள் மண்டல வாரியாக நடைபெறும் பேச்சு போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்கள் மாநிலம் தழுவிய பேச்சு போட்டியில் கலந்து கொண்டு பரிசுகளை வெல்ல வாய்ப்பு பெறுவார்கள் இந்த பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர் முதல் பரிசாக ரூ 5 லட்சம் வழங்கப்படுகிறது என்பதனையும் தெரிவித்து கொள்கிறது

பேச்சு போட்டிக்கான ஏற்பாடுகளை தென்காசி தெற்கு மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர் செல்வக்குமார், மாவட்ட தலைவர் ரகுபதிபாண்டியன், துணை அமைப்பாளர்கள் மணிகண்டன் , ஜாஹிர்உசேன், சிவராஜன், தயாபொன் ஆனந்த் ஆல்பின்ராய் உள்ளிட்ட நிர்வாகிகள் செய்துவருகின்றனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# வைகோ பிறந்தநாள்: கோவில்பட்டியில் மதிமுக சார்பில் முதியோர் இல்லத்தில் அன்னதானம்



**கோவில்பட்டி செப் 23**

கோவில்பட்டி மத்திய ஒன்றிய மதிமுக சார்பில் செயலாளர் சி. சரவணன் ஏற்பாட்டில் கோவில்பட்டி ராஜீவ்நகர் நீடிய வாழ்வு முதியோர் இல்லத்தில் வைத்து ஆதரவற்ற முதியோர்களுக்கு வைகோ பிறந்தநாளை தமிழர்களின் தலைநிமிர்வு நாள் எனக்கூறி கேக்வெட்டி கொண்டாடினர். தொடர்ந்து அனைவருக்கும் புத்தாடை வழங்கி மதியஉணவு பரிமாறப்பட்டது. இந்தவிழாவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட மதிமுக செயலாளர் ஆர்.எஸ். ரமேஷ;, மாநில சொத்து பாதுகாப்புகுழு உறுப்பினரும் மாவட்ட இளைஞரணி செயலாளருமான விநாயகாரமேஷ;, மாவட்ட துணைச்செயலாளர் திரிசூலம். பவுன்மாரியப்பன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் சிவக்குமார், கலைத்துறை இணைச்செயலாளர் ராமச்சந்திரன், கிழக்கு ஒன்றியசெயலாளர் மாரிசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எல்.எஸ். கணேசன், வனராஜன், மாவட்ட மாணவரணி துணைசெயலாளர் மாரிமுத்து, இணையதளம்பிரிவு ஜெயக்குமார், மறுமலர்ச்சி மனோதுரைராஜ், முத்துச்செல்வம், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் முத்துச்செல்வம், உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரி முன்னாள் மாணவர் கூட்டமைப்பின் சார்பில் கருத்தரங்கு




**கோவில்பட்டி செப் 23**

கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரி முன்னாள் மாணவர் கூட்டமைப்பின் சார்பில் பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்ற தலைப்பில் கருத்தரங்கு கல்லூரி வளாகத்தில் நடந்தது. அமெரிக்காவின், அலிடா சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியும், கல்லூரியின் முன்னாள் மாணவியுமான கோமதி திருவடி சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். முன்னாள் மாணவர்சங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் கே.ஜி.ஸ்ரீனிவாசகன் வரவேற்றார். மாணவி ஆ.ஆர்த்தி அபிராமி சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தினார். சுமார் 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி இயக்குநர் முனைவர் எஸ்.சண்முகவேல், முதல்வர் முனைவர் கே.காளிதாச முருகவேல் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி மற்றும் தகவல் தொழல்நுட்பத் துறை தலைவர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# தென்காசி தெற்கு மாவட்ட மாவட்ட விவசாய அணி, மீனவர் அணி ஆலோசனை கூட்டம்



**தென்காசி.செப்.23-**

தென்காசி தெற்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் வைத்து மாவட்ட விவசாய அணி மீனவர் அணி ஆலோசனை கூட்டம் தலைமை செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக தெற்கு மாவட்டம் செயலாளர் வே.ஜெயபாலன் கலந்து கொண்டு சிறப்புரையற்றினார் கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் அழகுசுந்தரம், மகேஷ் மாயவன், மாவட்ட அமைப்பாளர்கள் முருகன், ஜேம்ஸ், ரமேஷ், முத்துராமலிங்கம், நகர செயலாளர் அப்பாஸ், நகர மன்ற தலைவர் மூப்பன்ஹபீபுர் ரஹ்மான், துணை சேர்மன்கள் கனகராஜ்,முத்துபாண்டியன், ஐவேந்திரன், துணை அமைப்பாளர்கள் சண்முகராஜ், காதர்அண்ணாவி, வெள்ளத்துரை பாண்டியன், ராஜேந்திரன், கனியப்பா, ராமகிருஷ்ணன், ராஜா முகமது இஸ்மாயில், முகைதீன் பிச்சை, இஸ்மாயில், பழனி , முருகன், அருணாச்சலம், கவுன்சிலர் பொன் செல்வன், பேரூராட்சி மன்ற தலைவர் ஆய்க்குடி சுந்தர், ஊராட்சி மன்ற தலைவர் சந்திரசேகர், சீவநல்லூர் சரவணன், ராமராஜ், வெல்டிங் மாரியப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளியில் மகாத்மா காந்தி இடுப்பு துணிக்கு மாறிய தினம் அனுசரிப்பு



**குற்றாலம் செப்.23:**

இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளியில் மகாத்மா காந்தி இடுப்புத் துணிக்கு மாறிய தினத்தை நினைவு கூறும் விதமாக தொடக்க நிலைப் பயிலும் மாணவர்கள் செங்கோட்டையில் ஊர்வலம் நடத்தினர். பள்ளிக் குழுமத் தலைவர் மோகன கிருஷ்ணன் , செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன் தலைமைத் தாங்கினார் முதல்வர் வனிதா மற்றும் கல்வி ஆலோசகர் உஷாரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செங்கோட்டை நகராட்சி துணை ஆய்வாளர் கிரிசையன் மற்றும் இளவரசி கொடியசைத்து ஊர்வலத்தை துவக்கி வைத்தனர். ஊர்வலத்தில் மாணவி மஹிராபாணு மற்றும் ஸ்ரீமீனாட்சி குழுவினர் நிகழ்ச்சியினை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அறிவிக்க மாணவன் செர்வின் சாம்ராஜ் குழுவினர் மகாத்மா காந்தியின் குடும்ப உறுப்பினர்களை எடுத்துக்காட்டும் விதமாக குறுநாடகமும் நடத்தினர். ஊர்வலத்தில் மாணவர்கள் காந்தியின் உருவம் பொருந்திய முக கவசம் அணிந்து அணிவகுப்பு செய்தனர். அணிவகுப்பானது மாணவர்களால் காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்தலோடு நிறைவடைந்தது.

ஊர்வலத்திற்கு பள்ளி கல்விக் குழுமத் தலைவர் மோகன கிருஷ்ணன் மற்றும் செயலாளர் காந்திமதி மோகனகிருஷ்ணன் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

# வந்தே பாரத் ரயில் சோதனை ஓட்டம் வெற்றி




**நெல்லை.செப்.23.**

சென்னை- நெல்லை இடையே இயக்கப்படும் வந்தே பாரத் ரயிலின் சோதனை ஓட்டம் வெற்றி பெற்றுள்ளது.

இந்திய ரயில்வே துறை சார்பில் பல்வேறு வசதிகளை உள்ளடக்கிய அதிநவீன வந்தே பாரத் ரயில்கள் அறிமுகம் செய்யப்பட்டு நாட்டின் முக்கிய நகரங்களுக்கு இயக்கப்பட்டு வருகின்றன.தமிழகத்தில் சென்னை-மைசூரு, சென்னை-கோவை இடைய வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வரும் நிலையில், அடுத்ததாக சென்னை-நெல்லை இடையே வருகிற செப். 24-ஆம் தேதி வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை பிரதமர் நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைக்கிறார்.

சென் னை-நெல்லை இடையிலான வந்தே பாரத் விரைவு முதல் கட்டமாக திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர் ஆகிய இடங்களில் நின்று செல்லும். நெல்லை-சென்னை இடையிலான வந்தே பாரத் விரைவு தினந்தோறும் நெல்லையிலிருந்து காலை 6 மணிக்கு புறப்பட்டு பிற்பகல் 1.50 மணிக்கு சென்னையைச் சென்றடையும். பின்னர் அங்கிருந்து பிற்பகல் 2.50 மணிக்கு புறப்பட்டு இரவு 10.40 மணிக்கு நெல்லையை வந்தடையும். முதற்கட்டமாக 8 பெட்டிகள் இதில் இணைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், சென்னை-நெல்லை இடையே இயக்கப்படும் வந்தே பாரத் ரயிலின் சோதனை ஓட்டம் நேற்று காலை தொடங்கியது.

சென்னையில் இருந்து நெல்லைக்கு சோதனை முறையாக வந்தே பாரத் ரயில் இயக்கப்பட்டது. இதன்படி ரயில் திருச்சி, மதுரை, விருதுநகரைக் கடந்து வெற்றிகரமாக திருநெல்வேலியை வந்தடைந்தது. இதன் மூலமாக சோதனை ஓட்டம் வெற்றி பெற்றுள்ளது.

# ஹில்டன் மெட்ரிக் பள்ளியில் சர்வதேச ரோஜா தினம் கொண்டாட்டம்



**குற்றாலம் செப்.23:**

பழைய குற்றாலம் ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் மழலைப் பிரிவினர் சர்வதேச ரோஜா தினத்தினை கொண்டாடினர். இத்தினமானது புற்றுநோயாளிகளுக்கு ஆதரவும், நம்பிக்கையை ஊட்டுவதற்காக கொண்டாடப்படுகிறது. மழலை மலர்கள் சிவப்பு வண்ண உடை அணிந்து, கையில் ரோஜா மலர் ஏந்தி அப்பூவினைப் பற்றி ஒரு சில வரிகளையும் உரைத்தனர். மழலையர் வகுப்புகளும் வண்ண, வண்ண ரோஜா மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பள்ளி தாளாளர் ஆர்.ஜெ.வி.பெல், பள்ளி செயலாளர் கிரேஸ் கஸ்தூரி பெல், பள்ளி முதல்வர் அலெக்ஸாண்டர் மற்றும் பள்ளி தலைமையாசிரியர் ஜஸ்டீன் இளங்கோ ஆகியோர் மழலைச் செல்வங்களைக் கண்டு களித்து வாழ்த்தி மகிழ்ந்தனர்.

# மிலாடி நபி, காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மதுபான கடைகளை திறக்க தடை: கலெக்டர் உத்தரவு

**தென்காசி செப்.23:**

மிலாடி நபி 28.09.2023 (வியாழக்கிழமை) மற்றும் – காந்தி ஜெயந்தி 02.10.2023 (திங்கள் கிழமை) அனுசரிக்கப்படுவதை முன்னிட்டு தென்காசி மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு மதுபானக்கடைகள், அதனுடன் இணைந்த மதுக்பானக்கூடங்கள் மற்றும் தங்கும் விடுதியுடன் இணைந்த மதுபானக்கூடங்கள் மேற்கண்ட தினத்தில் மட்டும் மூடப்பட்டிருக்கும் மற்றும் அன்றைய தினம் மதுபானம் விற்பனை ஏதும் நடைபெறாது என மாவட்ட ஆட்சித் தலைவர் துரை.இரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.



கோவில்பட்டி நகர மதிமுக சார்பில் வைகோபிறந்தநாள்விழா பழனிஆண்டவர் கோவில்தெருவில் நகரசெயலாளர் எஸ். பால்ராஜ் தலைமையில் கொண்டாடபட்டது. நகர இளைஞரணிசெயலாளர்முத்துகிருஷ்ணன்,நகரபொருளாளர் தம்பிதுரை, துணை செயலாளர்கள் குழந்தைவேல், ராமர், மாவட்டபிரதிநிதி லியோ. செண்பகராஜ், வார்டு செயலாளர்கள்வேலாயுதம்,சுந்தர்ராஜ்,கலந்துகொண்டனர்.

<u>கடையநல்லூரில்</u>

# சவர்மா கடைகளில் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் திடீர் சோதனை

**தென்காசி செப்.23:**

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சி பகுதியில் வெளிநாட்டு மாடல்களில் ஏராளமான ஓட்டல்கள், பாஸ்ட்புட் கடைகள் இயங்கி வருகிறது சமீபத்தில் நாமக்கல்லில் தனியார் உணவகத்தில் சவர்மா சாப்பிட்ட சிறுமி பரிதாபமாக உயிரிழந்தார். இச்சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இதனைத்தொடர்ந்து உணவகங்களில் ஆய்வு மேற்கொள்ள சுகாதாரத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் உத்தரவிட்டிருந்தார். அதன் அடிப்படையில் கடையநல்லூர் உணவு பாதுகாப்பு அலுவலர் செல்வராஜ் தலைமையில் சுகாதார அலுவலர் பிச்சையா பாஸ்கரன் ஆய்வாளர் சிவா ஆகியோர் அடங்கிய தனிக் குழுவினர் கடையநல்லூர் ,கிருஷ்ணாபுரம் ,யூனியன் அலுவலகம் ஆகிய பகுதிகளில் உள்ள ஓட்டல், பாஸ்ட்புட் கடை, ஷவர்மா கடைகளில் ஆய்வு நடத்தினர். இதில் ஐந்து உணவங்களில் உணவுப் பாதுகாப்புச் சட்ட விதி மீறல்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

காலாவதியான உணவு பொருட்கள், கெட்டுப் போன 25 கிலோ கோழி இறைச்சி ஆகியவற்றை பறிமுதல் செய்தனர் அதன் பின்னர் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் அவைகளை பினாயில் ஊற்றி அழித்தனர்.5 உணவகங்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது

இது குறித்து உணவு பாதுகாப்பு அலுவலர் செல்வராஜ் கூறுகையில், “சவர்மா கோழிக்கறி விற்பனை செய்யும் கடைகள் அன்றைய தினம் மீதமாகும் கோழி இறைச்சியை கண்டிப்பாக குளிர்சாதன பெட்டியில் வைக்கக்கூடாது. அப்படியே வைத்தாலும் அதற்கான டெம்பரேச்சர் ஐ கண்காணிக்க வேண்டும் ஒருமுறை பயன்படுத்திய எண்ணெயை மறுமுறை பயன்படுத்தக் கூடாது கலர் பொடிகளை பயன்படுத்தக் கூடாது சோதனையின்போது, அவ்வாறு இருப்பது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்களும் தங்களது பகுதியில் காலாவதியான மற்றும் கெட்டுப்போன உணவு பொருள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் உணவு பாதுகாப்புத்துறைக்கு புகார் தெரிவிக்கலாம்” என்று கூறினார்.

# குளறுபடியின் மொத்த வடிவமாக மகளிர் உரிமை தொகை திட்டம் உள்ளது

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் குற்றச்சாட்டு

**மதுரை, செப். 23**

அரசின் மகளிர் உரிமை திட்டம் குளறுபடியின் மொத்த வடிவமாக உள்ளது என்று முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது குறித்து முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் கூறியதாவது,

தேர்தல் வாக்குறுதியிலே குடும்ப அட்டை வைத்திருக்கிற அனைத்து மகளிர்க்கும் வழங்கப்படும் என்கிற உறுதியை கொடுத்தின் காரணமாக தமிழக மக்கள் அதை நம்பி தி.மு.க.விற்கு அதிகாரத்தை வழங்கினார்கள். எல்லோருக்கும் மகளிர் உரிமைத்தொகை என்று கூறிவிட்டு தற்போது தகுதி உள்ளவர்களுக்கு மட்டுமே மகளிர் உரிமைத்தொகை என்று தெரிவிப்பது மகளி2ரை வஞ்சிக்கின்ற செயலாகும்.

அது மட்டுமல்ல குளறுபடியின் மொத்த அடையாளமாக இந்த திட்டம் இருக்கிறது. இப்படி இருக்கிற சூழ்நிலையிலே, அரசின் சார்பிலே ஒரு புள்ளி விவரம் வெளியிடப்பட்டது .அதில் ஒரு கோடி ரூ. 60 லட்சம் மனுக்கள் பெறப்பட்டு, அதில் 60 லட்சம் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. மீண்டும் மேல்முறையீடு செய்யலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

மகளிர் உரிமைச் தொகை திட்டத்தில் பலருக்கு விண்ணப்பம் செய்யாதவர்களுக்கும் குறுஞ்செய்தி செய்திகள் வருவதாகவும், சிலருக்கு பணம் கிடைத்திருப்பதாகவும் செய்திகள் வருகின்றன . அரசே தகுதியை நிர்ணயித்து தள்ளுபடி செய்து, அதனை திரும்பியும் மேல் முறையீடு செய்யலாம் என்று சொல்வதை தமிழக மக்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள். ஆகவே குளறுபடியின் மொத்த அடையாளமாக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



தேனி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று கலெக்டர் ஷஜீவனா தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது.

# சேவுகம்பட்டி பேரூராட்சியில் சுகாதாரப் பணிகள் சிறப்பு முகாம்

**வத்தலகுண்டு செப்.23**

திண்டுக்கல் மாவட்டம் சேவுகம்பட்டி பேரூராட்சி பகுதியில் திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் பூங்கொடி திண்டுக்கல் மண்டலம் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் மனோரஞ்சிதம் ஆகியோர் உத்தரவின் பெயரில். பேரூராட்சி தலைவர் வனிதா தங்கராஜன், துணைத் தலைவர் தெய்வ ராணி விஜயன் பேரூராட்சி செயல் அலுவலர் து கீதா ஆகியோர் தலைமையில் சேவுகம்பட்டி பேரூராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசு ஒழிப்பு புகை மருந்துகள் அடிக்கப்பட்டு வருகிறது கழிவு நீர் வாய்க்கால் அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டு மருந்துகள் அடிக்கப்பட்டு வருகிறது.



தங்கள் பகுதிகளில் யாருக்கேனும் காய்ச்சல் வந்தால் உடனடியாக பேரூராட்சி அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று பேரூராட்சி சார்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி கவுன்சிலர்கள் தனபால் சாந்தி ராஜேந்திரன் நாகராணி மாரியப்பபிள்ளை ஜோதிமணி கோகிலா தவப்பாண்டி ஆண்டி பாலமுருகன் கல்விக்கரசி மற்றும் பேரூராட்சி தூய்மை காவலர்கள், கொசு ஒழிப்பு பணியாளர்கள் ஆகியோருடன் முழு சுகாதார பணிகள் சிறப்பாக நடைபெற்று கொண்டு இருக்கிறது என பேரூராட்சி செயல் அலுவலர் கூறினார்.

# பசும்பொன் தேவர் நினைவாலயத்தில் பாத்திமா அலி தரிசனம்

**கமுதி, செப்.23-**

கமுதி அருகே பசும்பொன் தேவர் நினைவாலயத்தில் வெள்ளிக்கிழமை முஸ்லிம் ராஸ்ட்ரிய மன்ச் தென்னிந்திய ஒருங்கிணைப்பாளர் பாத்திமா அலி குடும்பத்துடன் சாமி தரிசனம் செய்தார்.



ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அடுத்துள்ள பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள தேவர் நினைவாலயத்தில் பாரதிய ஜனதா கட்சியின் முஸ்லிம் ராஸ்ட்ரிய மன்ச் தென்னிந்திய ஒருங்கிணைப்பாளர் பாத்திமா அலி தனது குடும்பத்தினருடன் தேவர் சிலைக்கு மாலை அணித்து, மரியாதை செலுத்தி, சிறப்பு பூஜை செய்தார். பின்னர் தேவர் வாழ்ந்த பூர்வீக வீடு, பூஜை அறை, புகைப்பட கண்காட்சியை பார்வையிட்டார்.

பின்னர் தேவர் நினைவாலய வளாகத்தில் அமர்ந்து தியானம் செய்தார். அப்போது முக்குலத்தோர் முன்னேற்ற சங்க தலைவர் கீரந்தை மு.வீரபெருமாள்தேவர், பாஜக ஒன்றிய தலைவர் பசும்பொன் ராமமூர்த்தி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# ஒட்டன்சத்திரம் சக்தி கல்லூரியில் புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி




**ஒட்டன்சத்திரம் . செப். 23**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உலக ரோஜா தினத்தை முன்னிட்டு புற்றுநோய் விழிப்புணர்வுபேரணி தாளாளர் மருத்துவர் வேம்பண்ணன் தலைமையில் நடைபெற்றது.

பேரணிக்கு முதல்வர் தேன்மொழி முன்னிலை வகித்தார் .பேரணியை மாங்கரை ஊராட்சி மன்ற தலைவர் பரமேஸ்வரி துவக்கி வைத்தார்.

பேரணியை உதவி பேராசிரியர்கள் பிரியங்கா, சத்திய ஜோதி ஒருங்கிணைப்பு செய்திருந்தனர் .படம் திண்டுக்கல் மாவட்டம் டம் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது

## அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில்

# கல்விச்சான்றுகளை மாணவ, மாணவிகள் வழங்கி நேரடிச்சேர்க்கை பெறலாம்

## ஆட்சித்தலைவர் ஜெயசீலன் தகவல்

**விருதுநகர் செப்.23.**

விருதுநகர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 2023-ம் ஆண்டிற்கான பயிற்சியாளர்கள் நேரடி சேர்க்கை 31.08.2023 முடிய நடைபெற்றது. இச்சேர்க்கையில் பூர்த்தி செய்யப்பட்ட இடங்கள் போக காலியாகவுள்ள புதிய தொழிற்நுட்பத்துடன் இவ்வாண்டு முதல் தொடங்கப்பட்டுள்ள தொழிற்பிரிவுகளில் இன ஒதுக்கீடு மற்றும்; 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ள மதிப்பெண்களின் தரவரிசை அடிப்படையில் 23.09.2023-க்குள் உரிய அசல் கல்விச்சான்றுகளை வழங்கி நேரடிச்சேர்க்கையில் மாணவ / மாணவிகள் அதிகளவில் சேர்ந்து தொழிற்கல்வியினை பயின்று வேலை வாய்ப்பினை பெற்று பயன்பெறலாம்.

தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில்நுட்பவியளாளர் *(Industrial Robotics & Digital Manufacturing Technician)*, தீயணைப்பு தொழிற்நுட்பம் மற்றும் தொழிற்சாலை பாதுகாப்பு மேலாண்மை *(Fire Technology and Industrial Safety Management)*, உட்புற வடிவமைப்பு மற்றும் அலங்காரம் *(Interior Design and Decoration)*, இயந்திர வேலையாள் *(Machinist)* போன்ற தொழிற்பிரிவுகளில் நேரடி சேர்க்கை நடைபெறுகிறது.

மேலும் இப்பயிற்சியில் ஓராண்டு தொழிற்பிரிவுக்கான கட்டணம் ரூ.185/-ம் மற்றும் ஈராண்டு தொழிற்பிரிவுக்கான கட்டணம் ரூ.195/-ம் நேரிடையாக செலுத்தப்பட வேண்டும்;. இந்நிலையத்தில் பயிற்சி பெறும் தகுதியுள்ள அனைத்து பயிற்சியாளர்களுக்கும் விலையில்லா மடிக்கணினி / விலையில்லா மிதிவண்டி / கட்டணமில்லா பேருந்து பயணச் சலுகை / மாதாந்திர கல்வி உதவித் தொகை ரூ.750/- (வருகைக்கு ஏற்ப) / சீருடை 2 செட் (தையல்கூலியுடன்) / மூடு காலணி 1 செட் / பாடப்புத்தகங்கள் / வரைபட கருவிகள் மற்றும் பயிற்சியாளர் அடையாள அட்டை/ இவற்றுடன் 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு முடிய அரசு பள்ளியில் பயின்ற பெண்களுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ்; மாதந்தோறும் ரூ.1000 /- ம் பெற்று வழங்கப்படும்.

இவ்வாய்ப்பினை 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மற்றும் அதற்கு மேல் கல்வித்தகுதியுடைய 11-ம் வகுப்பு / 12-ம் வகுப்பு/ பட்டய / பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்ற / தோல்வியடைந்த / இடைநின்ற மாணவ /மாணவியர் தொழிற்கல்வியினை பயின்று நல்ல ஊதியத்துடன் வேலை வாய்ப்பினை தனியார் / மத்திய / மாநில அரசு தொழிற் நிறுவனங்களில் பெற வளாகத் தேர்வு மூலம் தெரிவு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர்ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

# முதுகுளத்தூர் அருகே மனைவியை வெட்டி கொலை செய்த கணவன்

**முதுகுளத்தூர்.செப் 23.**

முதுகுளத்தூர் தாலுகா திருவரங்கம் கிராமத்தைச் சேர்ந்த சவுந்தரபாண்டி மகன் செல்வம்(35) இவரது மனைவி லெட்சுமி (33) இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளன. 5 ஆண்டுகளாக கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்கிறார்கள். செல்வம் சென்னையில் வசித்து வருவதாகவும் மனைவியை சென்னைக்கு அழைத்ததற்கு வர மறுத்து விட்டாராம்.

இந்நிலையில் 100 நாள் வேலைக்கு சென்று வேலை முடித்து திரும்பிய லெட்சுமியை அவரது கணவன் வழிமறித்து மண்வெட்டியால் முகம் மற்றும் தலையில் வெட்டியதுடன் அரிவாளால் கழுத்தையும் அறுத்து உயிர் பிரியும்வரை கொலை செய்துள்ளனர்.

இது குறித்து தகவலறிந்த கீழத்தூவல் இன்ஸ்பெக்டர் கண்மணி சப் இன்ஸ்பெக்டர் பிரவீன் ஆகியோர் வழக்குபதிவு செய்து செல்வத்தை கைது செய்தனர். இக்கொலை சம்பவம் இப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

# ஐ.டி.பி.ஐ. வங்கி அமிர்த மஹோத்சவ் எப்.டி. திட்டங்களில் சலுகைகளை நீட்டிக்கிறது

**சென்னை, செப் 23-**

ஐ.டி.பி.ஐ. வங்கி அதன் பிரபலமான "அமிர்தமஹோத்சவ் எஃப்டி" திட்டங்களில் பண்டிகை கால ஆஃபர்களை இந்த வரையறுக்கப்பட்ட நேர விளம்பரத்தின் கீழ், 444 நாட்களுக்கு நீட்டிக்கிறது. 7.75 சதவீதம் பி.ஏ. என்ற இலாபகரமான உச்ச விகிதத்தை விருப்பத்தேர்வாக வழங்குகிறது.

இது தவிர, 375 நாட்களுக்கான கவர்ச்சிகரமான விருப்பத் தேர்வு விகிதம் 7.60 சதவீதம் பி.ஏ.வரை. இந்த பண்டிகை கால சலுகை நீட்டிப்பு அக்டோபர் 31, 2023 வரை என்ற வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே கிடைக்கக்சுடியதாக இருக்கும்.

மேலும், வங்கி '271 நாட்கள் முதல் 1 வருடத்திற்கும் குறைவான' முதிர்வு ஸ்லாப்பில் 50 அடிப்படை புள்ளிகள் (பி.பி.எஸ்.) மூலம் கவர்ச்சிகரமான விகிதங்களை நிச்சயித்துள்ளது, இது ஆண்டுக்கு 6.75 சதவீதம்என்ற உச்ச விகிதத்தை வழங்குகிறது.

# அமேசான் இந்தியாவில் விற்பனையாளர்களுக்கு மல்டி சேனல் புல்பில்மெண்ட் ஐ அறிமுகப்படுத்துகிறது

**கோவை, செப் 23-**

அமேசான்.இன் இந்தியாவில் மல்டி-சேனல் ஃபுல்ஃபில்மெண்ட் (MCF) இன் அறிமுகத்தை அறிவித்தது. இந்த அறிமுகத்தின் மூலம், டி2 சி பிராண்டுகள், உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில்துறையில் உள்ள சில்லறை விற்பனையாளர்கள் உள்ளிட்ட விற்பனையாளர்கள், அவர்களின் சொந்த இணையதளங்கள் உட்பட, பரந்த அளவிலான விற்பனை சேனல்களிலிருந்து பெறப்பட்ட வாடிக்கையாளர் ஆர்டர்களைக் கையாள, அமேசானின் இந்தியா முழுவதும் உள்ள இருப்பு, அதிநவீன பூர்த்தி செய்யும் மையங்கள் மற்றும் வாடிக்கையாளர் ஆர்டர்களைக் கையாள்வதற்கான லாஜிஸ்டிக்ஸ் திறன்கள் ஆகியவற்றை பயன்படுத்துவதன் மூலம் தங்கள் பூர்த்திச் செயல்பாடுகளில் புரட்சியை ஏற்படுத்தமுடியும். எம்.சி.எப். மூலம், விற்பனையாளர்கள் இந்தியாவின் 100% சேவை செய்யக்கூடிய பின் குறியீடுகளில் (20,000+ பின்கோடுகள்) அமேசானின் விரிவான உள்ளடக்குதலைப் பயன்படுத்துவதன் மூலம் அமேசான், வாடிக்கையாளர் ஆர்டர் நிறைவேற்றத்தை அனைவருக்கும் கிடைக்கச்செய்கிறது மற்றும் இந்தியாவில் தங்கள் சந்தையை அதிகரிக்க அனுமதிக்கிறது, புதிய வணிக வாய்ப்புகளை உருவாக்குகிறது.

டிஜிட்டல் மயமாக்கல், வரையறுக்கப்பட்ட வரம்பு மற்றும் உற்பத்தித்திறன் தடைகள் ஆகியவற்றின் சவால்கள், சரக்கு கண்காணிப்பு மற்றும் அதிக அனுப்பும் செலவுகள் போன்ற பிற சவால்களுடன், நடுத்தர மற்றும் சிறிய அளவிலான பிராண்டுகளின் விரிவாக்கத்திற்கு அடிக்கடி இடையூறு விளைவிக்கின்றன. மல்டி-சேனல் ஃபுல்ஃபில்மெண்ட் இந்த சவால்களை அவர்களின் பூர்த்திசெய்யும் தேவைகள் அனைத்திற்கும் முழுமையான மற்றும் வகையில் சிறந்த தீர்வு மூலம் நிவர்த்தி செய்கிறது. தயாரிப்பு மேம்பாடு, சந்தைப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் சேவை போன்ற முக்கிய வணிக நடவடிக்கைகளில் கவனம் செலுத்த விற்பனையாளர்களை இது அனுமதிக்கிறது என்று அமேசான் இந்தியா இன் ஃபுல்ஃபில்மெண்ட் சேனல்ஸ் அண்ட் குளோபல் டிரேட் துணைத் தலைவர் விவேக் சோமரெட்டி கூறினார்.



மதுரை விளாங்குடி பகுதியில் மேற்கு 6-ம் பகுதி எம்.ஜி.ஆர். இளைஞர் அணி செயலாளர் கண்ணனின் அலுவலகத்தை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு எம்.எல்.ஏ. ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம். எஸ்.பாண்டியன், ஆர் அண்ணாதுரை, பா. குமார்,சோலைராஜா, பரவை ராஜா, விளாங்குடி கே.ஆர்.சித்தன், மலைச்சாமி, சுந்தர்ராஜ், கேசவன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# திருமங்கலம் அருள்மிகு எட்டுப்பட்டறை பத்ரகாளி முத்துமாரியம்மன் கோவில் புரட்டாசி பொங்கல் விழா

## கொடியேற்றத்துடன் துவங்கியது

**திருமங்கலம்.செப்.23.**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் கொல்லர் திடலில் அமைந்துள்ள அருள்மிகு எட்டுப்பட்டறை ஸ்ரீ பத்திரகாளி முத்துமாரியம்மன் திருக்கோவிலின் 26வது ஆண்டு புரட்டாசி பொங்கல் மற்றும் பூக்குழி திருவிழா கொடியேற்றத்துடன் கோலாகலமாக துவங்கியுள்ள நிலையில் முக்கிய நிகழ்வாக வரும் 3-ம் தேதி பூக்குழி பெருவிழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.



பழம்பெரும் பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரை மாநகரின் புறநகரமாக உள்ள திருமங்கலம் வில்வ வனத்தில் அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் திருக்கோவிலுக்கு தென்புறம் கன்னி திசையில் குண்டாற்றின் கிழக்கு கரையில் அமர்ந்துள்ள கருணை வடிவமான கிராமத்து தேவதையாக வீற்றிருந்து குலதெய்வமாகவும் ரட்சிக்கின்ற எட்டுப்பட்டறை அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி முத்து மாரியம்மன் திருக்கோவிலின் 26வது ஆண்டு புரட்டாசிப் பொங்கல் விழா நேற்று கொடியேற்றத்துடன்வெகு சிறப்பாக துவங்கியது.

அதன்படி கடந்த நேற்று துவங்கிய இந்த புரட்டாசி பொங்கல் விழா வரும் 4-ம் தேதி வரை நடைபெறுகிறது.இதையொட்டி தினம்தோறும் எட்டுப்பட்டறை ஸ்ரீ பத்திரகாளி முத்து மாரியம்மனுக்கு அபிஷேகம்,அலங்காரம் மற்றும் தீபாராதனையுடன் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகிறது.

அதன்படி முதலாம் நாள் திருவிழாவான நேற்று மஹாகணபதி ஹோமம் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடத்தப்பட்டு கொடியேற்றம் முடிந்து சிறப்பு பூஜையுடன் காப்பு கட்டுதல் மற்றும் மாலையில் பூச்சொரிதல்விழா நடைபெற்றது.பின்னர் வரும் 29-ம் தேதி காலை அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு,சிறப்பு அன்னதானம் மற்றும் மாலையில் சாமி புறப்பாடும் நடைபெறுகிறது. வரும் 30-ம் தேதி காலை அம்மனுக்கு சிறப்பு அலங்காரம்,மஞ்சள் நீராட்டு மற்றும் மாவிளக்கு எடுத்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வரும் 1-ம் தேதி மாலை மாலையில் திருவிளக்கு பூஜை நடத்தப்பட்டு பிரசாதம் வழங்கப்படுகிறது.வரும் 2-ம் தேதி மாலை பக்தர்கள் அக்கினிசட்டி எடுக்கும் வைபவம் நடைபெறுகிறது.

இதனை தொடர்ந்து வரும் 3-ம் தேதி விழாவில் மதியம் அக்னிப்பூ வளர்த்து மாலையில் அம்மனுக்கு சிறப்பு பூஜை வழிபாட்டுடன் பக்தர்கள் பூக்குழி இறங்கி சிறப்பு வழிபாடு செய்திடும் நிகழ்வு நடைபெறுகிறது.

விழாவின் கடைசி நாளான 4-ம் தேதி திருவிழா வன்று ஸ்ரீபத்திரகாளி அம்மனுக்கு பொங்கலிட்டு சக்தி கிடாய் வெட்டுதல் மற்றும் மாலையில் கோவிலிலிருந்து பக்தர்கள் முளைப்பாரி எடுத்துச் சென்று குண்டாற்றில் கரைத்தல் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெறுகிறது.

பூஜைகளை பிரம்மஸ்ரீ நா.பழனிவேல் ஆச்சாரியார், பரம்பரை பூசாரி எஸ்.பாலாஜி ஆகியோர் நடத்துகின்றனர்.ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு அம்மனை வழிபடும் இந்த திருவிழாவிற்கான ஏற்பாடுகளை கோவிலின் டிரஸ்டி ஜே.டி.விஜயன் தலைமையில் நிர்வாகக் குழுவினர்,விழாக்கமிட்டி மற்றும் மேற்கு வட்டார இளைஞர் அணியினர் சிறப்புடன் செய்து வருகின்றனர்.



மதுரைமாநகராட்சிஈ.வெ.ரா.பெண்கள்மேல்நிலைபள்ளியில்விலையில்லாமிதிவண்டிகளை மாணவிகளுக்கு மேயர் இந்திராணி பொன்வசந்த் வழங்கினார். அருகில் மண்டல தலைவர் பாண்டிசெல்வி, கல்வி குழு தலைவர் ரவிசந்திரன், துணை ஆணையாளர் தயாநிதி, மாமன்ற உறுப்பினர் நூர்ஜஹான், முத்துமாரி ஆகியோர் உள்ளனர்.

# முதுகுளத்தூரில் ரத்ததான முகாம்



**முதுகுளத்தூர், செப். 23**

முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

கீழத்தூவல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பாக முதுகுளத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி மாணவர்கள் இணைந்து மருத்துவர் நாகரஞ்சித் தலைமையில் மருத்துவர் நெப்போலியன் -தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் வாளையானந்தம் ஆகியோர் முன்னிலையில் ரத்த தான முகாம் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் நடைபெற்றது.

செவிலியர்கள் சண்முகவள்ளி, இளங்கோவன்-தொழிற்பயிற்சி நிலைய ஆசிரியர்கள் குருநாதன், முருகானந்தம், பாலமுருகன், மணிவர்மன்-சேதுபாஸ்கர், சுகாதார ஆய்வாளர்கள் ஜெயபாலமுருகன்- நேதாஜி, கருணாகரசேதுபதி ஆகியோர் முகாமில் கலந்துகொண்டனர்.

